செ.வெ.எண்: 60 நாள்: 22.11.2016

# பத்திரிக்கைச் செய்தி

## தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம்

தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் தமிழகம் முழுவதும் 486 அரசு இ-சேவை மையங்களை அமைத்து அரசின் பல்வேறு துறைகள் சார்ந்த சேவைகளை வழங்கி வருகிறது.

மேலும் கூடுதலாக 339 நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்களையும் அமைத்து (PERMANENT ENROLLMENT CENTRE – PEC) புதிதாக ஆதார் சேர்க்கை பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. இம்மைங்களில் பொது மக்கள் புதிதாக ஆதார் எண் பெறுவதற்கு விண்ணப்பம் செய்து வருகின்றனர்.

தற்பொழுது ஆதார் சேர்க்கைக்கு அதிக எண்ணிக்கையில் பொது மக்கள் வருவதால் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்களின் எண்ணிக்கை அதிகரிக்க உள்ளது. எனவே, ஆதார் சேர்க்கை மையங்களில் தரவு உள்ளிட்டாளராக பணியாற்ற விரும்புவோர் இந்நிறுவனத்தின் இணையதளத்தில் www.tactv.in இதற்கென ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் தாங்கள் விபரங்களை பதிவு செய்து கொள்ளலாம் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது. ஆதார் சேர்க்கை தரவு உள்ளீட்டாளராக பணியாற்றுவதற்கு இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் (UIDAI ) தரவு உள்ளீட்டாளருக்கான சான்றிதழை பெற்றிருக்க வேண்டும்.

எனவே, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுனத்தினால் நிர்வகிக்கப்படும், ஆதார் சேர்க்கை மையங்களில் தரவு உள்ளீட்டாளராக பணியாற்றுவதற்கு விரும்புவோர் தாங்கள் பெற்றுள்ள சான்றிதழை இந்நிறுவனத்தின் இணையதளத்தில் www.tactv.in 30.11.2016-க்குள் பதிவு செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. புதிதாக ஆதார் சேர்க்கை மையங்கள் அமைத்தப்பின், தேவைக்கேற்ப, தரவு உள்ளீட்டாளர்களின் விண்ணப்பங்கள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, தகுதிவாய்ந்தவர்கள் பணியமர்த்தப்படுவர்.

மேற்காணும் தகவலை தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.ஜெ.குமரகுருபரன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**